## ‘முதல்வரின் முகவரி’ துறையில் – ‘நீங்கள் நலமா?’ திட்டத்தில் பயன்பெறும்

# பயனாளிகளிடம் உரையாடிய முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## திட்டச் செயல்பாடுகள் பற்றி கருத்துகளைக் கேட்டறிந்தார்!

**சென்னை, ஜூலை 6–**

**தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற்ற பயனாளிகளை காணொலி வாயிலாக தொடர்புகொண்டு அரசு நலத் திட்டங்கள் குறித்து பயனாளிகளின் கருத்துகள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்த பின்னோட்டங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.7.2024) தலைமைச் செயலகத்திலிருந்து, அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற்ற பயனாளிகளைத் தொடர்பு கொண்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்த கருத்துகளைக் கேட்டறியும் முதல்வரின் முகவரி துறையின் “நீங்கள் நலமா” என்ற திட்டத்தில் பயனாளிகளை நேரடியாக வீடியோ கால் வாயிலாக தொடர்பு கொண்டு அவர்களின் கருத்துகள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்த பின்னூட்டங் களைக் கேட்டறிந்தார்.

### செம்மையாக செயல்படுத்தும் நலத்திட்ட உதவிகள்!

சமூகத்தின் விளிம்புநிலையில் இருக்கும் மக்களை கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் உயர்வடைய செய்து அவர்களை சமூக நீரோட்டத்திற்குள் கொண்டு வருவதன் மூலம் தமிழ்நாடு சமத்துவ சமுதாயமாக திகழ வேண்டும் என்ற உயரிய நோக்குடன் முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு அரசு அனைத்து தரப்பு பொதுமக்களும் பயனடையும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை செம்மையாகச் செயல்படுத்தி வருகிறது.

மக்கள் நலத்திட்டங்கள் அனைத்தும் உரியவர்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்யும் நோக்குடன், மக்களுக்கும் அரசிற்கும் இடைவெளியைக் குறைத்திடும் வகையில் மக்களின் கருத்துகள் மற்றும் பின்னூட்டங்களைப் பெற “நீங்கள் நலமா” என்ற புதியதொரு திட்டம் கடந்த 6.3.2024 அன்று முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.

### விவரத் தொகுப்பு பதிவேற்றம்!

இத்திட்டம் முதல்வரின் முகவரித்துறை யின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், அரசுத் துறைகளின் செயல்பாட்டில் உள்ள முக்கியமான நலத் திட்டங்கள் மற்றும் அரசு துறைகளால் வழங்கப்படும் சேவைகள் மூலம் பயன்பெற்ற பயனாளிகளிடமிருந்து கருத்துகள் மற்றும் பின்னூட்டம் பெறப்படுகிறது. அதனடிப்படையில், நலத்திட்டங்களின் பயன்கள் மக்களுக்குச் சென்று சேர்வதை உறுதி செய்வது மட்டுமல்லாமல், அரசு வழங்கிடும் சேவைகளின் தரத்தினை மேம்படுத்த வழிவகைகள் மேற்கொள்ளப்படும். மேலும், “நீங்கள் நலமா” வலைத்தளத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து அரசுத் திட்டங்கள் குறித்த விவரத் தொகுப்பு பதிவேற்றம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் (4.7.2024) முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து பல்வேறு பயனாளிகளை காணொலி வாயிலாகத் தொடர்பு கொண்டு அவர்களின் கருத்துகள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்த அவர்களது பின்னூட்டங்க ளைக் கேட்டறிந்தார்கள்.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற கோயம்புத்துரைச் சேர்ந்த திருமதி சித்ரலேகாவை முதல்வர் அவர்கள் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு பேசினார்.

### மானியத்துடன் கடன்!

திருமதி சித்ரலேகா: ஆட்டோ பொபைல் உதிரி பாகங்கள் உற்பத்தி நிலையத்தை நடத்தி வருவதாகவும், தான் தொழில் தொடங்க கடன் வாங்குவதற்காக மாவட்ட தொழில் மையத்தை அணுகிய போது, அங்குள்ள அலுவலர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்தவர்களை தொழில்முனைவோர்களாக உருவாக்கிட தமிழ்நாடு அரசு புதிதாக அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளதாகவும், அதைப் பற்றி விளக்கி கூறினார்கள் என்றும் தெரிவித்தார்.

மேலும், இத்திட்டத்தில் விண்ணப்பிப்ப தற்கு மிகவும் எளிமையாக இருந்தது என்றும், விண்ணப்பித்த பிறகு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு, ஒரு மாதத்தில் தொழில் தொடங்க ரூ.68,37,000/ மானியத்துடன் கடன் முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது என்றும், தன்னைப் போன்றவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டமாகும் என்றும், இத்திட்டத்தை கொண்டு வந்த முதலமைச்சர் அவர்களுக்கு தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.




### மாற்றுத்திறனாளிகள் நலத்திட்டம்!

மாற்றுத்திறனாளிகள் நலத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வரும் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி சஞ்ஜெய் தாயாரிடம் முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு பேசினார்.

தான் வீட்டு வேலை பார்த்துக் கொண்டு இருப்பதாகவும், மகன் சஞ்ஜெய் நேஷனல் பள்ளியில் படித்து வருவதாகவும், மாற்றுத்திறனாளிக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை ரூ.1,500/ தொடர்ச்சியாக, வங்கியின் மூலமாக பெற்று வருவதாகவும், மாற்றுத்திறனாளி அலுவலக அதிகாரிகள் தங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் மாதந்தோறும் 14ஆம் தேதி அன்றே ரூ.1,000/ வங்கிக் கணக்கில் வந்து விடுகிறது என்றும், உடன்பிறந்த அண்ணணைப் போன்று உதவி வருவதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார். அப்பணத்தைக் கொண்டு பத்தாம் வகுப்பு படிக்கும் தனது மூத்த மகனுக்கு ரூ.500/ டியூஷன் கட்டணம் செலுத்தி விடுவதாகவும், மீதமுள்ள பணத்தை இதர செலவுகளுக்கு பயன்படுத்தி கொள்வதாகவும் தெரிவித்தார்.

“இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48” – என்ற திட்டத்தின் கீழ் பயன்பெற்ற இராணிப் பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மணிகண்டன் அவர்களிடம் முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு பேசினார்.

மணிகண்டன்: தனக்கு சமீபத்தில் கார் மோதி விபத்து ஏற்பட்டது என்றும், மியாட் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும், அதற்கு உதவி செய்த முதலமைச்சர் அவர்களுக்கு தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

## மக்கள் பயன்பெற நிறைவேற்றப்படும் திட்டங்கள்!

மாற்றுத்திறனாளிகள் நலத்திட்டத்தில் பயன்பெற்று வரும் செங்கல்பட்டு மாவட்டதைச் சேர்ந்த சுகன்யா அவர்களின் சகோதரரிடம் தொலைபேசி மூலமாக முதலமைச்சர் அவர்கள் தொடர்பு கொண்டு பேசினார்.

தான் இரு கண்களையும் இழந்த மாற்றுத்திறனாளி என்றும், தனது அக்கா சுகன்யாவிற்கு இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், தனது அக்கா மகனும் மூளை வளர்ச்சி குன்றியவன் என்றும் தெரிவித்தார். தனக்கும் தனது அக்காவிற்கும் மாதந்தோறும் தலா ரூ.1,500/ரூபாயும், மேலும் தனது அக்கா மகனுக்கு ரூ.2,000/ மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை தொடர்ந்து வருகிறது என்றும், இந்த உதவித்தொகையை நம்பித்தான் குடும்பமே உள்ளது என்றும் தெரிவித்தார். மேலும், மாற்றுத்திறனாளி அலுவலகத்தில் அலுவலர்களெல்லாம், நன்றாக கவனித்துக்கொள்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

### காலை உணவுத் திட்டம்!

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் பயன்பெற்று வரும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுமி கீர்த்திகாஶ்ரீ தாயார் திருமதி சங்கீதா அவர்களிடம் முதலமைச்சர் அவர்கள் வீடியோ கால் மூலமாக தொடர்பு கொண்டு பேசினார்.

திருமதி சங்கீதா: இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குடி தொடக்கப் பள்ளியில் தனது மகள் கீர்த்திகாஶ்ரீ மூன்றாம் வகுப்பு படித்து வருவதாகவும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினால் காலை 8 மணிக்கே பள்ளிக்குச் சென்று விடுவதாகவும், காலை உணவு நன்றாக இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது, முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், முதல்வரின் முகவரித்துறை சிறப்பு அலுவலர் த.மோகன், ஆகியோர் உடனிருந்தனர்.

---

### கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை – ஆலைகளின் மூலதனத்திற்கு வழங்க

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ரூ.94.49 கோடி வழங்கி உத்தரவு!

## வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 6–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு கரும்பு நிலுவைத் தொகை வழங்கவும், ஆலைகளின் நடைமுறை மூலதனத்திற்காகவும் தமிழ்நாடு அரசு ரூ.94.49 கோடி வழிவகைக் கடன் அனுமதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.



கரும்பு விவசாயிகளின் நலனில் சிறப்புக் கவனம் செலுத்தும் நோக்குடனும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை அதிகரிக்கும் பொருட்டும் 2022–ஆம் ஆண்டு முதல் சர்க்கரைத்துறை வேளாண்மை – உழவர் நலத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டு முதலமைச்சர் அவர்களால் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இந்தியாவில் சர்க்கரை உற்பத்தியில் தமிழ்நாடு 4வது இடத்தில் உள்ளது. தொடர்ந்து சர்க்கரை உற்பத்தியில் தொடர் சரிவு என்ற நிலை மாறி 2022–23ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் 14.74 இலட்சம் மெ.டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்து மாநிலத்தின் சர்க்கரைத் தேவையான 15 இலட்சம் மெட்ரிக் டன் என்பதைப் பூர்த்தி செய்யும் நிலைக்கு முன்னேறி உள்ளது.

தமிழ்நாட்டில் 2023–24–ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் 12 கூட்டுறவு, 2 பொதுத் துறை, 16 தனியார் என மொத்தம் 30 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன.

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் 2023–24 அரவைப் பருவத்தில் 15.06.2024 வரை 30.82 இலட்சம் மெ.டன் கரும்பை அரவை செய்து, 8.92 சதவிகித சர்க்கரை கட்டுமானத்தில் 2.75 இலட்சம் மெ.டன் சர்க்கரையை உற்பத்தி செய்துள்ளது.

உற்பத்தி செய்யப்படும் சர்க்கரையை விற்பனை செய்து கரும்பு பணம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. சர்க்கரை விற்பனை மூலம் கரும்பு பணம் முழுமையாக வழங்க இயலாத சூழ்நிலையில் ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசால் வழிவகைக் கடன் அனுமதிக்கப்பட்டு கரும்பு பணம் நிலுவையின்றி வழங்கி முடிக்கப்படுகிறது.

கடந்த 2020–21 அரவைப் பருவம் முதல் 2022–23 அரவைப் பருவம் வரை கரும்பு நிலுவை தொகை வழங்கவும், ஆலைகளின் நடைமுறை மூலதனத்திற்காகவும் தமிழ்நாடு அரசு ரூ.600.37 கோடி வழிவகைக் கடனாக அனுமதிக்கப்பட்டு விவசாயிகளுக்கு கரும்பு பணம் நிலுவையின்றி வழங்கப்பட்டுள்ளது.

வ.எண் – அரவைப் பருவம் – தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்ட வழிவகைக் கடன் (ரூ. கோடி) வருமாறு:–

1) 2020–21 – 191.85, 2) 2021–22 – 252.91, 3) 2022–23 – 155.61. மொத்தம் – 600.37

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளால் நடப்பு 2023–24 அரவைப் பருவத்திற்கு வழங்க வேண்டிய ரூ.920.99 கோடியில் 15.06.2024 வரை ரூ.835.73 கோடி வழங்கப்பட்டு நிலுவையாக ரூ.85.26 கோடி விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது.

கரும்பு விவசாயிகளின் நலன் பாதுகாக்கும் வகையில் கரும்பு பணம் விவசாயி களுக்கு நிலுவையின்றி வழங்கிடவும் ஆலைகளின் நடைமுறை மூலதன செலவிற் காவும் ரூ.94.49 கோடி வழிவகைக் கடன் அனுமதித்து முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி காணை வடக்கு ஒன்றிய தேர்தல் பொறுப்பாளரும் பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சருமான எ.வ.வேலு, விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி காணை வடக்கு ஒன்றியம் கக்கனுர், அத்தியூர் திருக்கை, திருக்குனம் ஊராட்சியில் பொதுமக்களிடம் வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து வாக்குச் சேகரித்தார். உடன் மாவட்டச் செயலாளர்கள் த.உதயசூரியன் எம்.எல்.ஏ., தரணி வேந்தன் எம்.பி. மற்றும் ஓ.ஜோதி எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.